## 2 லட்சத்து 25 ஆயிரம் குடியிருப்புகளைக் கட்டி பராமரித்து வருகிறது அரசு!

# 2030ஆம் ஆண்டுக்குள் அனைவருக்கும் வீடு என்பது முதல்வரின் எண்ணம்!

## சட்டப்பேரவையில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மானியக் கோரிக்கையில் அமைச்சர் தா.மோ. அன்பரசன் பதிலுரை !

சென்னை, ஏப்.9-

**சட்டப்பேரவையில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மானியக் கோரிக்கை மீதான பதிலுரையில், அமைச்சர் தா.மோ. அன்பரசன் 2030ஆம் ஆண்டுக்குள் அனைவருக்கும் வீடு என்பதுதான் முதல்வரின் எண்ணம் என்று குறிப்பிட்டுள்ளார்.**

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மானியத்தில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் பதிலுரை வருமாறு:-

சிங்கத் தமிழ் படையின் பேரரசர், வங்கக் கடலோரம் உறங்கும் வரலாற்றுத் தலைவர், பேச்சில் பெரியார், மூச்சில் அண்ணா, கருத்தில் கழகம், காலமெல்லாம் தமிழர் நலம் என வாழ்ந்த முத்தமிழறிஞர், தமிழ் மண்ணை பகுத்தறிவின் தலைநகராமாக்கிய சரித்திர சாதனையாளர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தியாவே திரும்பிப் பார்க்கும் திராவிடமே! முதல்வர்களின் முதல்வராக இருக்கும் எங்கள் தலைவரே! தமிழைத் தாக்க யார் எந்த ரூபத்தில் வந்தாலும் பொசுக்கும் எரிமலையே! பத்து கோடி தமிழர்களின் பாதுகாப்பரணே! மும்பையில்கூட மராட்டியம்தான் முதல் மொழி என்று பேச ஆரம்பித்து விட்டார்கள். கன்னடத்தை தொட்டால் விட மாட்டோம் என கண்டனத்தை தெரிவித்து, பெங்களூருகூட பேச ஆரம்பித்து விட்டது. மொழி உணர்வின் முக்கியத்துவத்தை இந்தியாவுக்கே வெளிச்சம் போட்டு காட்டிய திராவிடத் தலைவரே! கண்மூடித்தனங்களுக்கு எதிராய் கொதிக்கும் கந்தகப் பூமி தமிழ்நாடு என்பதை ஒன்றியத்திற்கு உரக்கச் சொன்ன ஒப்பற்ற தலைவரே! குடும்பத் தலைவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1,000/ கொடுத்து, இல்லங்களிலும், உள்ளங்களிலும் மகிழ்ச்சி பரவச் செய்த மகாத்தான தலைவரே! பக்கத்து மாநிலங்களெல்லாம் உங்களைப் பார்த்து கற்றுக்கொள்கின்றன. தூரத்து மாநிலங்களெல்லாம் உங்களின் தொலைநோக்கை கண்டு வியக்கின்றன. முத்தமிழறிஞரின் புதல்வரே, எங்கள் முதல்வரே உங்களை வணங்குகிறேன்.

சுய மரியாதை இயக்கத்தின் சூரிய சுடரே! சனாதனத்தின் கண்களில் விரல் விட்டு ஆட்டிய சரித்திர வீரனே! வருங்கால தமிழகத்தை வாழ்விக்க வந்த வரமே! இளைஞர் படைக்கும் கலைஞர் படைக்கும் உற்சாகமூட்டும் உதய சூரியனே! துணை முதலமைச்சர் உதயநிதி அவர்களே, உங்களுக்கு என் வணக்கம்.

அவை முன்னவர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், துணைத் தலைவர், கொறடா அவர்களுக்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என் வணக்கத்தை பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

2025-2026 ஆம் ஆண்டு, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய மானியக் கோரிக்கையில் உரையாற்றுவதற்கு வாய்ப்பு வழங்கிய, நாங்கள் உயிராக போற்றுகிற எங்களுடைய ஒப்பற்ற தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும், இந்தப் பேரவைக்கு என்னை அனுப்பி வைத்த என்னுடைய தொகுதி மக்களுக்கும், எனது நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**தியாகத்தால் உருவான முதல்வர்!**

ஏழையின் சிரிப்பில் இறைவனை காண்போம் என்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் பொன்மொழிக்கேற்ப, தமிழகத்தில் ஐந்து முறை முதலமைச்சராக பொறுப்பேற்று, 70க்கும் மேற்பட்ட துறைகளையும், வாரியங்களையும் உருவாக்கி, தமிழ்நாட்டிற்கு என தனி அடையாளத்தையும், தனி கட்டமைப்பையும் ஏற்படுத்தி, கோடிக்கணக்கான ஏழையெளிய மக்களை வாழ வைத்தவர்தான் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அவரது மறு உருவமாக இருக்கின்ற நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சாதாரணமாக உருவானவர் அல்ல. தன்னுடைய தியாகத்தால், உழைப்பால், திறமையால், தானாக உருவெடுத்திருக்கிற தலைவர்தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு அவருக்கு வயது 72. இந்த 72 ஆண்டுகளில் 58 ஆண்டு காலம் பொது வாழ்க்கைக்கு சொந்தக்காரராக இருக்கின்ற ஒரே தலைவர் (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு தமிழ்நாட்டில் அவரை விட்டால் வேறு யாரும் ஆள் கிடையாது. கலைஞர் அவர்களின் மறைவிற்குப் பிறகு இந்த இயக்கம் அழிந்துவிடும், இந்த இயக்கத்தை வழி நடத்துவதற்கு ஆளே இல்லை என்று சொன்னவர்கள் எல்லாம் வியந்து பார்க்கக்கூடிய அளவிற்கு, இன்றைக்கு இந்த இயக்கத்தினுடைய தலைவராக பொறுப்பேற்று கம்பிரத்தோடு, கட்டுக்கோப்போடு இன்று வரை ஆட்சியையும், கட்சியையும் நடத்துகிற ஒரு மாபெரும் தலைவர்தான் என்பதை யாரும் மறந்துவிடகூடாது.

துமட்டுமல்ல, நடைபெற்று முடிந்த நாடாளுமன்ற தேர்தலில், இந்தியாவில் இருக்கின்ற இந்தியக் கூட்டணியில் இருக்கின்ற தலைவர் எல்லாம் நாம்தான் ஜெயிப்போம் என்று சொல்கிறபோது தமிழ்நாட்டில் மட்டும் 40க்கு 40 இடங்களில் வெற்றிப்பெற செய்த, இந்தியாவில் இருக்கிற மற்ற தலைவர்கள் எல்லாம் வியந்து பார்க்கக்கூடிய ஒரு நிலை உருவாக்கிய தலைவர் நம்முடைய முதல்வர் என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, இன்றைக்கு தலைவர் கலைஞருடைய மறு உருவமாக இருக்கின்ற நம்முடைய முதல்வர் அவர்கள், கலைஞர் இந்தியாவிற்கே வழிகாட்டக்கூடிய பல்வேறு திட்டங்களை கொண்டு வந்து, மற்ற மாநிலங்கள் எல்லாம் அதை நடைமுறைப்படுத்துகிற ஒரு நிலையை உருவாக்கி தந்தார். இன்றைக்கு தலைவர் கலைஞரைப்போலவே நம்முடைய முதலமைச்சர் அவர்களும், இந்தியாவிற்கே வழிகாட்டக்கூடிய பல்வேறு திட்டங்களை இன்றைக்கு கொண்டு வந்து அதை செயல்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக சொல்லவேண்டுமென்றால், மகளிர் உரிமைத் தொகை, மகளிர் விடியல் பயணம், காலை உணவுத் திட்டம், புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம், நான் முதல்வன் திட்டம், இல்லம்தேடிக் கல்வி, மக்களைத்தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம்நம்மைக் காக்கும் 48, கலைஞர் கைவினைத் திட்டம், தாயுமானவர் திட்டம், அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை இன்றைக்கு கொண்டு வந்து, இன்றைக்கு தமிழகத்தில் ஒரு சமுதாய மாற்றத்தை, சமூக சீர்த்திருத்தத்தை உருவாக்கி தந்திருக்கிற முதல்வர்தான் முதலமைச்சர் என்பதை நான் இந்த நேரத்தில் பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தலைவர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்த அற்புதமானத் திட்டங்களில் ஒன்றுதான் குடிசை மாற்று வாரியம். இன்றைக்கு அந்தத் திட்டத்தின் நோக்கம் என்னவென்று சொன்னால் சென்னை நகரில் நதிக்கரை ஓரங்களிலும், மீனவர் குப்பங்களிலும் எந்தவித அடிப்படை வசதியும் இன்றி, சுகாதாரமற்ற நிலையில் வாழ்ந்து வந்த அந்த ஏழை விளிம்பு நிலையில் இருக்கின்ற அந்த மக்களையெல்லாம் அவர்களுடைய சமூக பொருளாதார நிலையை மேம்படுத்தவும், தமிழகத்தில் குடிசைகளே இல்லாத நகரங்களை உருவாக்கவேண்டும் என்பதற்காகத்தான், இந்தியாவிலேயே 1970 ஆம் ஆண்டு நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தை முதல் முதலில் கொண்டு வந்தார்கள். இன்றைக்கு தமிழ்நாட்டில் உள்ள குடிசைகள் படிப்படியாக அகற்றப்பட்டு, இன்றைக்கு இரண்டு இலட்சத்து இருபத்து ஐந்தாயிரம் அடுக்குமாடி குடியிருப்புகளாக மாற்றப்பட்டு, ஏழையெளிய மக்களுடைய வாழ்விடத்தையும், வாழ்வாதாரத்தையும் மேம்படுத்திய நிலையில் நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த வாரியத்தின் பெயரை தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விடம் என்று மாற்றி, பெருமை சேர்த்திருக்கிறார்கள்.

1970 ஆம் ஆண்டு 4 கோடியில் தொடங்கப்பட்ட இந்த வாரியம், தற்போது சென்னை மாவட்டத்தில் மட்டும் 213 திட்டப் பகுதிகளில் ஒரு இலட்சத்து முப்பத்து நான்காயிரத்து நானூற்று முப்பத்து நான்கு அடுக்கு மாடி குடியிருப்புகளும், இதர மாவட்டங்களில் 254 திட்டப் பகுதிகளில் 90,566 அடுக்குமாடி குடியிருப்புகளும் ஆக மொத்தம் 467 திட்டப் பகுதிகளில் இரண்டு இலட்சத்து இருபத்து ஐந்தாயிரம் அடுக்குமாடி குடியிருப்புகளை கட்டி, நம்முடைய வாரியம் இன்றைக்கு பராமரித்து வருகிறது என்பதை நான் பெருமையோடு சொல்ல விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2030 ஆம் ஆண்டுக்குள் அனைவருக்கும் வீடு என்பது எண்ணம் ஆகும். 2014 ஆம் ஆண்டு செயல்படுத்தப்பட்ட அனைவருக்கும் வீடு கட்டுகிற திட்டம், நகர்ப்புரப் பகுதியில் 9 இலட்சத்து ஐம்பத்து மூன்று ஆயிரம் குடியிருப்புகள் தேவையென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இதில் அடுக்குமாடி குடியிருப்புத் திட்டத்தின்கீழ் ஒரு இலட்சத்து நாற்பத்து ஒரு ஆயிரத்து ஐநூற்று பதினெட்டு அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட ஒப்புதல் பெறப்பட்டு, 74,597வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிரு க்கிறது.

66,921குடியிருப்புகளுக்கான கட்டுமானப் பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், பயனாளிகள் தாமாக வீடு கட்டும் திட்டத்தில் 4,04,058 வீடுகள் கட்ட ஒப்புதல் பெறப்பட்டு, 3,36,552 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. 67,506 வீடுகள்



கட்டும் பணி இன்றைக்கு வேகமாக நடைபெற்று வருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். தற்போது, அடுக்குமாடி குடியிருப்பு கட்டும் திட்டம், பயனாளிகள் தாமாக வீடு கட்டும் திட்டம் இந்த இரண்டு திட்டத்தின்கீழ் 1,36,187 குடியிருப்புகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பயனாளிகள் தாமாக வீடு கட்டும் திட்டத்தின்கீழ், கடந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், ஆறு ஆண்டுகளில் 1,40,250 வீடுகள்தான் கட்டினார்கள். ஆனால், நம்முடைய அரசு பொறுப்பேற்ற இந்த நான்கு வருடங்களில், 1,96,302 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாமல், பயனாளிகள் தாமாக வீடு கட்டும் திட்டத்தில் இதுவரை, ஒன்றிய அரசு ரூ.1,50,000/தான் கொடுக்கிறார்கள். நம்முடைய மாநில அரசு ரூ.60,000/ கொடுக்கிறது. ஏனெனில், மொத்தம் ரூ.2,10,000/தான் அதற்கு முன்னர் BLCல் பணம் கொடுப்பார்கள். இந்த நிதி ஏழை எளிய மக்களுக்கு போதாது, இந்த நிதியில் அவர்களால் வீடுகள் கட்ட முடியாது என்பதை உணர்ந்த முதலமைச்சர் அவர்கள், இந்த ஆண்டு முதல் ரூ.60,000/ஐ ரூ.1,00,000/ஆக உயர்த்தி, இனி ரூ.2,50,000/ஆக உயர்த்தி வழங்கப்படும் என்று உத்தரவு போட்டிருக்கிற முதல்வர்தான் தலைவர் தளபதி என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## தாமாக வீடு கட்டும் திட்டத்தில் அரசு சார்பில் ரூ.2.50 இலட்சம் நிதி உயர்த்தி வழங்கிய முதல்வர்!

அடுக்குமாடி குடியிருப்பு கட்டும் திட்டத்தில், கடந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 2014 முதல் 2021 வரையிலான ஆறு வருடங்களில், ரூ.2,438 கோடி மதிப்பில் 27,668 குடியிருப்புகள் மட்டுமே கட்டப்பட்டிருக்கின்றன. நாம் ஆட்சிப் பொறுப்பேற்ற நான்கு வருடங்களில், 5,343 கோடியே 16 இலட்சம் ரூபாய் மதிப்பில் 46,929 அடுக்குமாடி வீடுகள் கட்டி, படிப்படியாக அந்த ஏழை மக்களை குடியமர்த்துகிற பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அனைவருக்கும் வீடு கட்டும் திட்டத்தின்கீழ், கட்டி முடிக்கப்பட்ட 74,597 அடுக்குமாடி குடியிருப்புகளில், கடந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், தொலைவில் இருக்கும் இடங்கள் மற்றும் வெளி இடங்களில் கட்டிவிட்டு, அங்கு ஆட்களே போட முடியவில்லை. கடந்த ஆட்சியில் மட்டும் 6,417 குடியிருப்புகள் மட்டுமே வழங்கப்பட்டிருந்தது. அத்தனை ஆட்களுக்கு மட்டும் தான் வீடு கொடுத்தார்கள். ஆனால், நம்முடைய அரசு பொறுப்பேற்ற இந்த நான்கு வருடங்களில் 56,299 அடுக்குமாடி குடியிருப்புகள் ஏழை எளிய மக்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாமல், 704 கோடியே 62 இலட்சம் ரூபாய் மதிப்பில் புதியதாக கட்டி முடிக்கப்பட்டுள்ள 6,058 அடுக்குமாடி குடியிருப்புகள் ஓரிரு மாதங்களில் அவர்களின் திருக்கரத்தால் திறந்து வைக்கப்பட இருக்கிறது என்பதை பெருமையோடு சொல்ல விரும்புகிறேன்.

ஏழை எளிய மக்களுக்காக வாரியத்தால் கட்டப்படுகிற மறு கட்டுமான குடியிருப்புக்கு சுமார் நான்கு இலட்சம், ஐந்து இலட்சம் ரூபாய் பயனாளிகள் பங்கு தர வேண்டியிருக்கிறது. அந்த ஏழைகளுக்கு இது சிரமம், அவர்களால் இதை கட்ட முடியாது என்பதை உணர்ந்த முதலமைச்சர் அவர்கள், திட்டப் பகுதிகளிலே மேற்கொள்ளப்படுகிற சாலை வசதி, குடிநீர் வசதி, தெரு விளக்குகள் என அடிப்படை வசதிகளுக்கான செலவினங்களை இனி அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும், அந்த ஏழைகளுக்கு கஷ்டத்தைக் கொடுக்கக்கூடாது என்று, நான்கு இலட்சம், ஐந்து இலட்சம் என்ற பயனாளிகளின் பங்கை ஒன்றரை இலட்சமாகக் கொடுத்து, அந்த ஒன்றரை இலட்சத்தைக்கூட அவர்களால் மொத்தமாகக் கட்ட முடியாது, மாதம் ஐநூறு ரூபாய் கட்டினால் போதும் என்று உத்தரவு போட்டு, அந்த ஏழைகளை எல்லாம் இன்றைக்கு பாதுகாத்திருக்கிற தலைவர் நம்முடைய முதலமைச்சர் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பயனாளிகளின் பங்களிப்புத் தொகை குறைத்ததினால் கடந்த நான்கு வருடங்களில் 23,975 குடும்பங்கள் செலுத்த வேண்டிய பயனாளிகளின் பங்களிப்புத் தொகை 552 கோடியே 18 இலட்சத்தை அரசே அந்த மக்களுக்காக வழங்கியிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**கருணைத் தொகை ரூ.24.000 ஆக உயர்வு!**

மறு கட்டுமானம் செய்யப்படும் திட்டப் பகுதியில் உள்ள குடியிருப்பு தாரர்களுக்கு வீடுகளை காலி செய்ய வேண்டுமென்றால் அதற்கு முன்பு ரூ.8,000 /தான் கொடுத்தார்கள். சென்னையில் ரூ.8,000/த்தில் வீட்டைகாலிசெய்து இன்னொருவீட்டிற்குச் செல்ல முடியுமா? முதலமைச்சர் அவர்கள், இந்தத் தொகை போதாது, பாவம் என்று கருதி, ரூ.24,000/ஆக உயர்த்தி, (மேசையைத் தட்டும் ஒலி) இன்றுவரை 11,254 குடும்பங்களுக்கு 26 கோடியே 74 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் கருணைத் தொகையாக வழங்கியிருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், கழக அரசு பொறுப்பேற்றவுடன் 40 வருட, 50 வருட கட்டடங்கள், கலைஞர் அவர்கள் கட்டினார்கள். அதில், சென்னையில் இருக்கும் கட்டடங்களில் வாழ முடியாது. நீண்ட நாள் பயன்பாடு, தட்பவெப்ப சூழ்நிலை, சிதிலமடைந்து வாழவே முடியாத அந்த வீடுகளெல்லாம் எவ்வளவு இருக்கின்றன என்று வல்லுநர் குழுவைக் கொண்டு கணக்கெடுத்தோம்.

இதில், சென்னையில் மட்டும் 35,631 குடியிருப்புகள், இதர மாவட்டங்களில் 3,229 குடியிருப்புகள் இருக்கின்றன. ஆக மொத்தம் 38,860 வீடுகள் இருக்கின்றன என்று கணக்கெடுத்தோம். இந்த நான்கு வருடங்களில், சிதிலமடைந்த வீடுகளை படிப்படியாக இடித்துவிட்டு, வீடு வழங்க வேண்டுமென்று முதல்வர் அவர்கள் இட்ட உத்தரவிற்கிணங்க, 3,128 கோடியே 16 இலட்சம் ரூபாய் மதிப்பில் 18,360 புதிய குடியிருப்புகள் கட்டப்படும் என்று அறிவித்து, (மேசையைத் தட்டும் ஒலி) அதன்படி 49 திட்டப் பகுதிகளிலே 12,869 குடியிருப்புகள் இடிக்கப்பட்டு 2,719 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பிலே 16 ஆயிரத்து 282 குடியிருப்புகள் கட்டுகின்ற பணி தற்போது நடைபெற்று வருகிறது. மீதமுள்ள 2,078 குடியிருப்புகளுக்கான கட்டுமான பணிகள் விரைவிலே தொடங்கப்படவிருக்கிறது. நடப்பாண்டு மட்டும், மறுகட்டுமானம், இடித்துவிட்டு புதியதாக கட்டுவதற்காக நம்முடைய அரசு 1,051 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறது என்பதையும் நான் இந்த அவையிலே தெரிவிக்க விரும்புகிறேன்.

இது இல்லாமல், 15 வருடங்களுக்கு முன்பு கட்டிய பழுதடைந்த குடியிருப்புகளெல்லாம் புனரமைக்கின்ற திட்டத்திலே இதுவரை 151 கோடியே 57 இலட்சம் ரூபாய் மதிப்பில் 51 ஆயிரம் குடியிருப்புகளை புனரமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டு, இதுவரை 30,357 குடியிருப்பு கள், பழுது பார்த்து, புனரமைப்பு செய்து, புதுபொலிவு பெற்றிருக்கிறது. 20,613 குடியிருப்புகளில் அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ரூ.100 கோடியில் அத்தியாவசியப் பணிகள்**

அது மட்டுமல்லாமல், அயோத்திதாச பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டு திட்டத்தை தலைவர் அவர்கள் கொண்டு வந்தார்கள். 2023-ளள2024 மற்றும் 2024 2025 ஆம் ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட 100 கோடி ரூபாய் நிதியில் 36 திட்டப் பகுதியில் உள்ள 14,496 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, அங்கன்வாடி மையம், நியாய விலைக் கடைகள், சாலை, மின் விளக்கு, மழைநீர் வடிகால் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மேலும், 28 திட்டப் பகுதியிலுள்ள 43,396 குடியிருப்புகளுக்கான அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நடப்பாண்டு இந்தத் திட்டத்திற்கு நம்முடைய அரசு 50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னையில், அடையாறு, கூவம் ஆற்றங்கரைகளில் இருக்கின்ற ஏழையெளிய குடும்பங்களுக்கு CRRT திட்டத்தின்கீழ் நிரந்தர வீடுகள் கட்டித்தர வேண்டுமென்று திட்டமிட்டு, 23,796 ஏழை குடும்பங்கள் மறு குடியமர்வு செய்ய கணக்கிடப்பட்டிருக்கிறது. இதில், 18,727 குடும்பங்கள் பெரும்பாக்கம், கண்ணகிநகர், கூடப்பாக்கம் போன்ற பல்வேறு திட்டப் பகுதிகளிலே குடியமர்த்தப்பட்டிருக்கிறார்கள். மீதமுள்ள 5,069 குடும்பங்களுக்கு வீடுகள் ஒதுக்கீடு செய்ய தயார் நிலையில் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதில்லாமல், பெரும்பாக்கம், துரைப்பாக்கம், கண்ணகிநகர், நாவலூர், அத்திப்பட்டு திட்டப் பகுதியிலே வாழ்கின்ற மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக அவர்களது அடிப்படை வசதியை பூர்த்தி செய்ய ரூபாய் 18 கோடியே 5 இலட்சம் ரூபாய் செலவிலே குடிநீர் வசதி, பள்ளி வகுப்பறைகள், சாலைகள், பூங்காக்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

மேலும், 133 கோடியே 51 இலட்சம் ரூபாய் மதிப்பில், விளையாட்டு மைதானம், நவீன நூலகம், சமுதாய நலக் கூடங்கள், திறன் பயிற்சி மையம், பொது பயன்பாடு மையம், பூங்காக்கள், சாலைகள், மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் அமைக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. அதில்லாமல், பெரும்பாக்கம், செம்மஞ்சேரி, கண்ணகிநகர் ஆகிய திட்டப் பகுதிகளில் 42,985 நபர்களுக்கு மகளிர் நலம், வாழ்வாதார மேம்பாடு, சுகாதாரம், போதை தடுப்பு போன்றவற்றில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. 29,099 இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது. 1,893 இளைஞர்களுக்கு தொழில்முனைவோர் பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது. இனிவருங்காலங்களில், அனைத்து திட்டப் பகுதிகளிலும் இந்தப் பணியை நம்முடைய அரசு மேற்கொள்ளவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், 875 மாணவ, மாணவிகளுக்கு CSR நிதியைப் பெற்று, உயர் கல்வி பயில உதவித் தொகையாக 1 கோடியே 99 இலட்சத்து 19 ஆயிரம் வழங்கப்பட்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஆட்சிக் காலத்தில் இந்த வாரியத்திற்கு ஆளே போதவில்லை. நமது அரசு வந்ததற்கு பிறகு அரசின் திட்டங்களை துரிதமாக செயல்படுத்தவும், வாரியத்திற்கு வருவாயைப் பெருக்கவும், கழக அரசு பொறுப்பேற்ற பின் TNPSCல் 63 உதவி பொறியாளர், 11 சமுதாய அலுவலர், 87 இளநிலை உதவியாளர், 117 பண வசூலாளர், 7 சுருக்கெழுத்துதட்டச்சர், வரைவாளர் என மொத்தம் 286 பணியாளர்கள் புதியதாக நியமனம் செய்யப்பட்டு, வாரிய வளர்ச்சி பணிகள் வேகப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே உரையாற்றிய நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி, திரு. ச. அரவிந்த் ரமேஷ், திரு. க. கணபதி ஆகியோர் வாரிய மனைகளில் கிரையப் பத்திரம் வழங்க வேண்டுமென்று இங்கே கோரிக்கை வைத்தார்கள். அந்த 804 அரசாணை பற்றி உங்களுக்கு எல்லாம் தெரியும். இதற்கு முன்பாக நாம் ஓரளவுக்கு அந்தப் பகுதிகளில் முகாம்கள் நடத்தி நியாயமாக இருப்பதை எல்லாம் கொடுத்துக்கொண்டு வருகிறோம். நம்முடைய துணை முதலமைச்சர் அவர்கள் தலைமையில் ஒரு செயலாக்கக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அதில் 2, 3 கூட்டங்கள் நடந்திருக்கின்றன. விரைவிலே யார் யாருக்கெல்லாம் அந்த கிரையப் பத்திரம் வழங்க முடியுமோ அதையும் நம்முடைய அரசு வழங்குவதற்கு தயாராக இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் பெருமையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டுதல்களுடன் தமிழ்நாட்டின் நகர்ப்புற பகுதிகளை குடிசையற்ற நகரங்களாக புதுப்பொலிவோடு மாற்றி வாரியத்தின் சார்பில் கட்டப்படுகிற அந்த வீடுகள் எல்லாம் 50 ஆண்டுகளுக்கு மேல் உறுதித் தன்மையோடு கட்டப்பட்டு அந்த ஏழையெளிய மக்களுக்கு வழங்குவதிலே தனிக் கவனம் செலுத்தி நம்முடைய வாரியம் சிறப்பாக நடைபெறும் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். 8 புதிய அறிவிப்புகளை அறிவிக்கிறேன்.

**அறிவிப்புகள்**

**1. சென்னை மற்றும் இதர நகரங்களில் வாரியத்தின் பராமரிப்பிலுள்ள 134 திட்டப்பகுதிகளில் 62,197 அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு ரூ.170.00 கோடி மதிப்பீட்டில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.** சென்னை மற்றும் இதர நகரங்களில் வாரியத்தின் பராமரிப்பிலுள்ள அடுக்குமாடி குடியிருப்புகளில் வாழும் குடும்பங்களுக்கு பாதுகாப்பான மற்றும் மேம்படுத்தப்பட்ட வசதியினை உறுதி செய்து, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக மாநில நிதி மற்றும் ஆதிதிராவிடர் நலத் துறையால் செயல்படுத்தப்படும் அயோத்திதாச பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்ட நிதியுதவியுடன் ரூ.170.00 கோடி திட்ட மதிப்பீட்டில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். **2. பெரும்பாக்கம் திட்டப்பகுதியில் வாரியத்தின் பராமரிப்பிலுள்ள 8,352 அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு ரூ.70.00 கோடி மதிப்பீட்டில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.** பெரும்பாக்கம் மறுகுடியமர்வு திட்டப்பகுதியில் அடுக்குமாடி குடியிருப்புகளில் வாழும் குடும்பங்களுக்கு பாதுகாப்பான மற்றும் மேம்படுத்தப்பட்ட வீட்டு வசதி அளித்து அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில் இக்குடியிருப்புகளுக்கு ரூ.70.00 கோடி திட்ட மதிப்பீட்டில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**3. ஒக்கியம் துரைப்பாக்கம்எழில் நகர் திட்டப்பகுதியில் வாரியத்தின் பராமரிப்பிலுள்ள 6.000 அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு ரூ.40.00 கோடி மதிப்பீட்டில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.**

ஒக்கியம் துரைப்பாக்கம்எழில் நகர் மறுகுடியமர்வு திட்டப்பகுதியில் வாரியத்தின் பராமரிப்பிலுள்ள அடுக்குமாடி குடியிருப்புகளில் வாழும் குடும்பங்களுக்கு பாதுகாப்பான மற்றும் மேம்படுத்தப்பட்ட வீட்டு வசதி அளித்து அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் ஏதுவாக இக்குடியிருப்புகளுக்கு ரூ.40.00 கோடி திட்ட மதிப்பீட்டில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். **4. திருவண்ணாமலை மாவட்டத்தில் வாழும் நகர்ப்புற ஏழை குடும்பங்களுக்காக 320 அடுக்குமாடி குடியிருப்புகள் ரூ.54.40 கோடி திட்ட மதிப்பீட்டில் கட்டப்படும்.** திருவண்ணாமலை மாவட்டத்தில் புதியதாக 320 அடுக்குமாடிகுடியிருப்புகள் ரூ.54.40 கோடி திட்ட மதிப்பீட்டில் கட்டப்படும். இக்குடியிருப்புகள் நகர்ப்புற ஏழை குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

**5. பெரும்பாக்கம் திட்டப்பகுதியில் ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் முதல்வர் படைப்பகம் அமைக்கப்படும்.** பெரும்பாக்கம் திட்டப் பகுதியில் பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் போட்டித் தேர்வுகளில் ஆர்வமுள்ள இளைஞர்கள் தங்களது தேர்வுகளுக்கு தயாராகும் வகையில் போதிய இடம் வழங்க ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் தனியாக ஒரு படைப்பகம் அமைக்கப்படும். இக்கட்டடம் விரிவான படிப்பு அறை, தனிப்பட்ட பயிலும் இடம், இணைய வழி கற்றலுக்கான இடங்கள் மற்றும் பிற வசதிகளை உள்ளடக்கியதாக இருக்கும்.

**6.ஒக்கியம் துரைப்பாக்கம்கண்ணகி நகர் திட்டப்பகுதியில் ரூ.2.00 கோடி திட்ட மதிப்பீட்டில் திறன் மேம்பாட்டிற்கான முதல்வர் திறனகம் அமைக்கப்படும்.** ஒக்கியம் துரைப்பாக்கம்கண்ணகி நகர் திட்டப் பகுதியில் 3,000 சதுர அடி பரப்பில் ரூ.2.00 கோடி திட்ட மதிப்பீட்டில் ஒரு நவீன தொழில் பயிற்சி மையம் கட்டப்படும். நவீன தொழிற்பயிற்சிக்கான உட்கட்டமைப்புகள், தொழிற்பகுதியுடன் கூடிய வகுப்பறைகள் போன்ற கட்டமைப்புகள் இந்த மையத்தில் ஏற்படுத்தப்படும்.

**7. வாரிய குடியிருப்புகளிலுள்ள இளம் பெண்களுக்கு ரூ.80.00 இலட்சம் செலவில் நல்வாழ்வு மற்றும் சுகாதார பெட்டிகள் வழங்கப்படும்.** சென்னை மற்றும் இதர நகரங்களில் உள்ள அடுக்குமாடி குடியிருப்புத் திட்டப்பகுதிகளில் வாழும் 11,772 இளம் பெண்களுக்கு நல்வாழ்வு மற்றும் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நோக்கத்துடன் ரூ.80.00 இலட்சம் மதிப்பீட்டில் சுகாதார பெட்டிகள் வழங்கப்படும். **8. பெரும்பாக்கம் திட்டப்பகுதியில் சுய உதவி குழுக்களுக்கு ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் பொது பயன்பாட்டு மையம் அமைக்கப்படும்.** பெரும்பாக்கம்திட்டப் பகுதியில், சுய உதவிக்குழுக்களுக்கான பொது பயன்பாட்டு மையம் ரூ.40.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்படும். இந்த பணியிடம் உற்பத்தி, பயிற்சி மற்றும் சந்தைப்படுத்துதல் போன்ற பணிகளுக்காக தனி இடங்களை வழங்கும்.

65 வெட்டுத் தீர்மானங்களை நம்முடைய உறுப்பினர்கள் தந்திருக்கிறார்கள். அதில் எல்லாமே வீடு வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அதாவது, ஆட்சேபணை இல்லாத புறம்போக்கு எங்கு இருக்கிறதோ அங்கு பயனாளிகள் இருக்கிறபட்சத்தில், பயனாளிகள் பங்களிப்புத் தொகை செலுத்த முன்வருகிறபோது நிச்சயமாக அந்த ஏழைகளுக்கெல்லாம் நம்முடைய வாரியத்தின் சார்பில் வீடுகள் கட்டித் தரப்படும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

துறையின் மானியக் கோரிக்கைக்கு உறுதுணையாக இருந்து முழு ஒத்துழைப்பு அளித்த தலைமைச் செயலாளர் ந. முருகானந்தம், IAS அவர்களுக்கும், நிதித் துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், IAS அவர்களுக்கும், முதலமைச்சரின் செயலாளர்கள் டாக்டர் உமாநாத், IAS அவர்களுக்கும், முனைவர் எம்.எஸ். சண்முகம், IAS அவர்களுக்கும், G. லைசுமதி, IAS அவர்களுக்கும், முதலமைச்சரின் தனிச் செயலாளர் M. தினேஷ்குமார் அவர்களுக்கும், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறையினுடைய அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, IAS அவர்களுக்கும், வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் அன்சுல் மிஸ்ரா, IAS அவர்களுக்கும், இணை மேலாண்மை இயக்குநர் விஜய கார்த்திகேயன், IAS அவர்களுக்கும் ஆக துறை சார்ந்த அலுவலர்களுக்கெல்லாம் என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொண்டு, உறுப்பினர்கள் தந்த அந்த வெட்டுத் தீர்மானங்களை திரும்பப்பெறும் மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரும்படி அன்போடு கேட்டு, விடைபெறுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் தா.மோ. அன்பரசன் பதிலுரை வழங்கினார்.